RESEARCH ARTICLE

INDIAN JOURNAL OF MULTILINGUAL RESEARCH AND DEVELOPMENT

DOI: 10.34256/ijmrd2113

# Devotion realized from Thiruvempavai

# திருவெம்பாவை உணர்த்தும் பக்தி

**N. Karunambika** [a,*]

[a] Department of Tamil, Pioneer College of Arts and Science, Jothipuram, Perianaickenpalayam, Coimbatore-641047, Tamil Nadu, India.

*Corresponding author Email: karunambigas@gmail.com

DOI: https://doi.org/10.34256/ijmrd2113

Received: 20-03-2021; Accepted: 25-03-2021; Published: 30-03-2021

**Abstract:** The vision of a rare human being is the other greatness. Though there are various methods of religious invocation to attain other births, there are two ways of being a right ethic for all. They are knowledge and devotion. The purpose of this article is to know the bhakti and its expression as a way of understanding the nature of the devotion which is easily understood by all of them.

**Keywords:** Thiruvempavai, Bhakti literature, Devotion, Manikkavacakar.

**Language:** **Tamil**

## வாசகரும் திருவெம்பாவையும்

பாரதநாட்டின் பழம் பெரும் சமயமாக திகழ்வது சைவ சமயமாகும். சைவ சமயத்தை வளர்த்த பெருமைமிகு சான்றோர்களில் குறிப்பிடத்தக்கச் சமய குறவர்கள் நால்வரில் ஒருவரே மாணிக்கவாசகர். இறைவனால் தடுத்தாட் கொள்ளப்பட்ட வாசகர் பாடிய நூல்கள் இரண்டு. ஒன்று ஞானச் செல்வம் என்று போற்றப்படுதும்.

‘‘திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்” என்று பக்தியின் தன்மையினை உணர்த்துவதுமாகிய திருவாசகம். மற்றொன்று போற்றுதலுக்குரிய திருவெம்பாவை. வைணவத்தையும், சைவ சமயத்தையும் ஒற்றுமைப் படுத்தும் காரணிகளில் ஒன்றே பாவை நோன்பு பாடல்களில், வைணவத்தில் ஆண்டாள் பாவை நோன்பு மேற்கொண்டு பாடியிருப்பதைப் போன்று, சைவத்தில் மாணிக்கவாசகர் பாவை நோன்பு மேற்கொள்ளும் பெண்ணாக தம் பக்தியினையும் சிவபெருமானின் பெருமைகளையும் பாடியுள்ளார். திருவாசகம் போன்றே திருவெம்பாவையும் வாசகரின் பக்தியை உணர்த்துகிறது.

## பக்தி

மனிதர்தம் உடலோடும், உயிரோடும் கலந்து நிறைந்து நிற்கும் இறைவனுக்கும் ஆன்மாவுக்கும் உள்ள உறவினை, இறைமை உறவினை உணரும் நிலையிலே உதிக்கின்றது அன்புணர்வு. இதைத்தான் பக்தி என்கின்றனர் ஆன்றோர்கள்.

“பக்தி என்பது சொற்களாலும் ஓவியங்களாலும் சிறைப்படுத்த இயலாத ஒன்று என்றப்போதும் அன்பு என்ற உணர்வில் சொல்லில் ஓரளவு உணர்த்த இயலும்.

இறைவன் மீது அடியார்களும், அடியார்கள் மீது இறைவனும் வைக்கும் அன்பே பக்தி எனலாம் "ஸா தஸ்மின் பரம பிரே மரூபா"

(இறைவனிடம் நாம் பூணும் ஆழ்ந்த அன்பே பக்தி)

என்று நாரதரும் பக்திக்கு இலக்கணம் வகுக்கிறார்.

இறையடியார்களிடம் உண்டாகும் அன்புதான் இறைவன் என்பதை

'அன்பே சிவம்' எனும் அடியார்தம் வாக்கு உணர்த்துகிறது.

## பக்தர்களின் நிலை

இறைவனிடம் அன்பு செலுத்தித் தவ வாழ்வை மேற்கொள்ளும் அடியார்கள், இறைவனுக்கு தூய மலர்களை தூவி, அவனுடைய புகழை வாயாரப் பாடியும், இறை அன்பிலே என்றும் திளைத்திருப்பர்.

இறைவனிடம் அன்பு செலுத்தித் தவ வாழ்வை மேற்கொள்ளும் அடியார்கள், இறைவனுக்கு தூய மலர்களை தூவி, அவனுடைய புகழை வாயாரப் பாடியும், இறை அன்பிலே என்றும் திளைத்திருப்பர்.

"அத்தன் ஆனந்தன் அமுதன் என்று உள்ளூறித் தித்திக்கப் பேசுவாய்"

(திருவெம்பாவை, பாடல் -3)

"என்னானை எனினரையன் இன்னமுதன் என்றெலோமுஞ்"

(திருவெம்பாவை, பாடல் -7)

"கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை

கேழில் விழுப்பொருள்கள் பாடினோங் கேட்டிலையோ"

(திருவெம்பாவை, பாடல் -8)

"சீதப் புனலாடிச் சிற்றம்பலம் பாடி

வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடி

சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி

ஆதி திறம்பாடி அந்தமா மாபாடி"

(திருவெம்பாவை, பாடல் -14)

எனும் இவ்வரிகள் இறைநாமத்தை போற்றும் அடியார்களின் நிலையினை வெளிப்படுத்துகின்றன.

இறைவனின் நாமத்தை பாடுவது அடியார்களுக்கு பேரானந்தத்தை நல்குவது என்றால், அடுத்த நிலையிலே இறைநாமத்தை கேட்டவுடன் உருகுகின்ற அடியார்களின் நிலையினை அறிவோரை மெய்மறக்கச் செய்கிறது.

"மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்

வீதிவாய் கேட்டலுமே விம்மி விம்மி மெய்மறந்து

போதார் அமளியன் மேல் நின்றும் புரண்டு இங்ஙன்

ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே"

(திருப்பாவை, பாடல்-1)

எனும் வரிகள் பக்தர்தம் நிலையினை எடுத்துரைக்கிறது. இறையன்பர்கள் இறைவனின் நாமத்தை கேட்டவுடன் உருகும் தன்மையின்னை

"........................................................................................................ இருஞ்சீரான்

சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்

தென்னா என்னா முன்னந் தீசேர் மெழுகொப்பாய்"

(திருவெம்பாவை, பாடல்-7)

எனும் வரிகளால் விளக்குகின்றார் வாசகர்.

இன்று பலருள்ளும் உருகும் நிலை உள்ளது. ஆயின் எதற்காக உருகுகிறார்கள், யாருக்காக உருகுகிறார்கள் என்பதில்தான் மாற்றம் ஏற்படுகிறது. இறையடிகளார் போல் நிலையான இறைவனுக்காக உருகும் நிலையில்லாது, நிலையற்ற மாயையான, சிற்றின்ப பொருட்களையும், நிலையில்லாத மனித உறவுகளை காணும் போது, எண்ணும் போது உருகும் நிலையே பல வருத்தங்களுக்கும், வேதனைகளுக்கும், பிரச்சனைகளுக்கும் காரணமாகின்றது. சிலர் மாயைக்காக உருக, சிலரோ உண்மையான அன்பில் உருகினாலும் அவ்வன்பும் நிலையற்றது என்பதை அறிவதும் இல்லை, உணர்வதுமில்லை. மனிதர்தம் இந்நிலையினை மாற்றவே மாணிக்கவாசகர் போன்ற அடியார்கள் தம் பாடல்களின் வழி உண்மை நிலை குறித்து எடுத்துக் கூறுகின்றனர்.

## இறைவனின் தன்மைகள்

கண்டவர் விண்டிலர், விண்டவர் கண்டிலர் எனும் மொழிக்கிணங்க இறைவனை முழுதாய் கண்டவர்களோ, உணர்ந்தவர்களோ இல்லை. எங்ஙனம் உணர்ந்தவர்களும், அத்தன்மையினை உரைத்தவர்களும் கிடையாது என்றப்போதும் சமயக் குரவர்கள் தாம் உணர்ந்த இறைவனின் தன்மையினை மக்களும் உணரும் வண்ணம் தம் பாடல்களில் பாடியுள்ளனர்.

திருவெம்பாவையின் முதல் வரியிலே இறைவனின் தன்மையினை

"ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்சோதி"

(திருவெம்பாவை, பாடல் - 1)

என்னும் வரிகளில் விளக்குகிறார் வாசகர்.

இறைவனின் யாதுமாகி நிற்கும் தன்மையினை

"ஞாலமே விண்ணே பிறவே"

(திருவெம்பாவை, பாடல்-5)

"வானே நிலனே பிறவே"

(திருவெம்பாவை, பாடல்-6)

எனும் வரிகளில் விளக்குகிறார்.

யாராலும் அறிய இயலாத பாதங்களை உடையவன் இறைவன் என்பதை,

"மாலறியா நான்முகங் காணா மலையினை நாம் போலறிவோம்..............................."

(திருவெம்பாவை, பாடல் -5)

என்றும்,

"............... விண்ணோர்கள் ஏத்துதற்குக் கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்"

(திருவெம்பாவை, பாடல் -2)

என்னும் வரிகள் கொண்டு விளக்கியுள்ளார் மாணிக்கவாசகர்.

யாராலும் அறிய இயலாத இறைவனின் தொழிலாக,

"இவ்வானுங் குவலயமும் எல்லோமுங்

காத்தும், படைத்துங் கரந்தும் விளையாடி"

(திருவெம்பாவை, பாடல் -12)

இவ்வுலகை படைத்தும், காத்தும், தீயவற்றை அழித்தும் விளையாடும் தன்மையான் என்கிறார் மாணிக்கவாசகர்.

## முடிவுரை

அதர்மம் தழைத்தோங்கி பல கொடூரங்கள் நிகழ்கின்ற இக்கலியுகத்தில் இன்று தர்ம்ம் நிலைத்து மிருகங்களாய் மாறி வரும் மனிதர்கள் தம் நிலை மாறி மனிதர்கள் தேவ நிலைக்கு உயர வேண்டுமென்றால கலியுகத்திற்கு தேவையான பக்தி ஒவ்வொருவருக்குள்ளும் உதயமாக வேண்டும். இப்பக்தி உதயமாக வேண்டுமென்றால் மாணிக்கவாசகரின் திருவெம்பாவை போன்ற நூல்களை அனைவரும் படித்து உணர்ந்தால் மட்டுமே இயலும். திருவெம்பாவை உணர்த்தும் பக்தி யாவருள்ளும் பெருகட்டும், உலகம் தழைக்கட்டும்.

## References

Anbarasu, B., (2016) Thiruppavai and Thiruvempavai Moolamum Uraiyum, Narmatha Pathipagam, Chennai, India.
Balasubramanian, C., (1987) Thiruvempavai, Paari Nilayam, Chennai, India.
Irai Anbu, V., (2017) Thiruvempavai, Vijaya Publication, Coimbatore, India.

## Funding

No funding was received for conducting this study.

## Conflict of interest

The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License**

© The author 2021. The text of this article is open access and licensed under a Creative Commons Attribution 4.0 International License

**Cite this Article**

N. Karunambika, Devotion realized from Thiruvempavai, Indian Journal of Multilingual Research and Development, Vol 2, Iss 1 (2021) 19-23. DOI: https://doi.org/10.34256/ijmrd2113